-183-

**சுருக்கம்**

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) கூடுதலாக 433 மாநகராட்சி/நகராட்சி அரசு நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை விரிவுபடுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (நிலை) எண்.01

நாள். 13.01.2023
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது மார்கழி 29

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை(நிலை)எண் 43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை நாள். 27.07.2022.
2. அரசாணை(வா)எண். 623/நிதித்(BG–1)துறை, CFA No.7, நாள் 22.08.2022.
3. அரசாணை (வா) எண்.802/நிதித்(BG–1) துறை CFA No. 7, நாள் 12.10.2022.
4. இயக்குநர், நகராட்சி நிர்வாகத்துறை அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/எம்.1, நாள் 28.12.2022.
5. ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண். எம்.2/3910/2022, நாள் 03.01.2023
6. சமூக நல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 17570/சஉதி–2/2021 நாள்.05.01.2023

------

**ஆணை:–**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 07.05.2022 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் ஊரக/கிராம ஊராட்சிகள், மற்றும் மலைப்பகுதிகளில் செயல்படும் 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,14,095 தொடக்கப்பள்ளி (1 முதல் 5–ஆம் வகுப்பு வரை) மாணவ மாணவியருக்கு அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் காலை உணவு வழங்குவதற்கான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை முதற்கட்டமாக செயல்படுத்திட மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.33.56 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டு, 15.09.2022 முதல் மேற்கண்ட திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

த.பி.பா

2. தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் 06.12.2022 அன்று நடைபெற்ற முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில், ஏனையவற்றுக்கிடையே, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தற்போது நடைமுறையில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் தொடக்கப் பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் விரிவுபடுத்த தெரிவிக்கப்பட்டதாக மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

3. மேலும் சமூக நல இயக்குநர் அவர்கள், மேலே நான்காவதாக படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதத்தில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் விடுபட்டுள்ள 433 நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் 56,098 மாணவ மாணவியருக்கு ஜனவரி, 2023 முதல் இத்திட்டத்தினை விரிவுபடுத்திட நடைமுறையில் உள்ள விலை விகிதங்களின்படி ஏற்கனவே உள்ள முகவர்கள் மூலம் செயல்படுத்திட ரூ.4,66,72,101/- வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

4. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதத்தில், தற்பொழுது முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1-ல், உள்ள 15 தொடக்கப் பள்ளிகளில் 14 பள்ளிகளில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், விடுபட்ட 1 தொடக்கப் பள்ளியில் உள்ள 62 மாணவர்களுக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்திட அனுமதி வழங்குமாறும் இதற்கான செலவினம் ஏதும் கூடுதலாக வழங்காமல் ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் இருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளதாக சமூக நல இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

5. சமூக நல இயக்குநர் அவர்கள், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் பள்ளிகளுடன் சேர்த்துக் கூடுதலாக உள்ள 433 நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் 56,098 தொடக்கப் பள்ளி மாணவ/மாணவியர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1ல் விடுபட்ட ஒரு பள்ளியில் உள்ள 62 மாணவர்கள் என மொத்தம் 56,160 மாணவ மாணவியருக்கு இத்திட்டத்தினை நீட்டித்து செயல்படுத்தவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ஒரு பள்ளி நீங்கலாக, ஏனைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கூடுதல் 433 நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு இத்திட்டத்தை நீட்டிக்கும் பொருட்டு தேவைப்படும் ரூ.4,66,72,101/- நிதியினை 2022-23-ஆம் நிதியாண்டிற்கான இறுதி துணை மதிப்பீட்டில் உள்ள தொகையில் இருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

185

6. சமூக நல இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் பள்ளிகளுடன் சேர்த்து இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 433 மாநகராட்சி/நகராட்சி அரசு நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் 56,098 தொடக்கப்பள்ளி மாணவ / மாணவியர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ல் விடுபட்ட ஒரு தொடக்கப் பள்ளியில் உள்ள 62 மாணவர்கள் என மொத்தம் 56,160 மாணவ மாணவியருக்கு ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நெறிமுறைகளின் படியும் செலவின விகிதத்திலும் விரிவுபடுத்தி ஆணையிடுகிறது.

7. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களில் உள்ள 433 மாநகராட்சி/நகராட்சி அரசு நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர் நிலைப் பள்ளிகளில் பயிலும் தொடக்கப் பள்ளி மாணவ மாணவியருக்கு விரிவு படுத்தும்பொருட்டு 2022–23–ஆம் நிதி ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீட்டில் உரிய கணக்குத் தலைப்பின்கீழ் இருப்பில் உள்ள ரூ.19.02 கோடி தொகையிலிருந்து ரூ.4,66,72,101– (ரூபாய் நான்கு கோடியே அறுபத்தாறு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து நூற்று ஒன்று மட்டும்) தொகையினைப் பெற்று, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு வழங்க சமூக நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண் 2269/நிதி(சந)/2022 நாள் 12.01.2023–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுன்சோங்கம் ஜடக் சிரு
முதன்மைச் செயலாளர்

பெறுநர்,
சமூக நல இயக்குநர், சென்னை–15.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர், நகராட்சி நிர்வாகத்துறை, சென்னை–28.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,சென்னை–34.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
சிறப்பு அலுவலர், இல்லம் தேடிக் கல்வி மற்றும் திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்,
முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், சென்னை–6.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை–I/II),
சென்னை–18.

சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.

நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை–9.
நிதி (சந/வசெபொ–I,II, வ.வ–I) த்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9,
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படிஅனுப்பப்படுகிறது//

13/1/2023
பிரிவு அலுவலர்.

13/1/2023

**இணைப்பு**

**(அரசாணை (நிலை) எண்.01,சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை (சந 4–1) துறை, நாள். 13.01.2023)**

**பள்ளிகள் மற்றும் பயனாளிகளின் விவரம்**

| வ.எண் | மாவட்டம் | நகராட்சிகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மாநகராட்சி | | | | |
| 1 | திருச்சிராப்பள்ளி | | 35 | 6193 |
| 2 | காஞ்சிபுரம் | | 17 | 2026 |
| 3 | கடலூர் | | 7 | 459 |
| 4 | தஞ்சாவூர் | | 7 | 892 |
| 5 | கும்பகோணம் | | 7 | 197 |
| 6 | வேலூர் | | 34 | 3701 |
| 7 | ஆவடி | | 13 | 2456 |
| 8 | தூத்துக்குடி | | 10 | 1819 |
| 9 | மதுரை | | 47 | 5236 |
| 10 | சேலம் | | 24 | 2506 |
| 11 | திண்டுக்கல் | | 1 | 280 |
| 12 | திருநெல்வேலி | | 18 | 974 |
| 13 | ஈரோடு | | 32 | 5793 |
| 14 | நாகர்கோவில் | | 25 | 1884 |
| 15 | கோயம்புத்தூர் | | 59 | 7961 |
| | | | 0 | 0 |
| நகராட்சிகள் | | | | |
| 16 | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் | 2 | 384 |
| 17 | | மடுக்கரை | 1 | 222 |
| 18 | விழுப்புரம் | விழுப்புரம் | 3 | 308 |
| 19 | | திண்டிவனம் | 0 | 0 |
| 20 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 4 | 823 |
| 21 | | திருவதிபுரம் | 4 | 481 |
| 22 | இராணிப்பேட்டை | ஆற்காடு | 3 | 276 |
| 23 | திருப்பத்தூர் | ஆம்பூர் | 4 | 1307 |
| 24 | | வாணியம்பாடி | 8 | 1079 |
| 25 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 11 | 1377 |
| 26 | பெரம்பலூர் | பெரம்பலூர் | 1 | 69 |
| 27 | | ஜெயங்கொண்டம் | 1 | 76 |
| 28 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 8 | 770 |
| 29 | திருவாரூர் | மன்னார்குடி | 5 | 516 |
| 30 | மயிலாடுதுறை | சீர்காழி | 3 | 307 |
| 31 | | மயிலாடுதுறை | 0 | 0 |
| 32 | நாமக்கல் | நாமக்கல் | 14 | 1610 |
| 33 | | திருச்செங்கோடு | 6 | 973 |

| | | | | |
|---|---|---|---|---|
| 34 | தூத்துக்குடி | கோவில்பட்டி | 2 | 278 |
| 35 | இராமநாதபுரம் | பரமக்குடி | 2 | 441 |
| 36 | சிவகங்கை | காரைக்குடி | 7 | 935 |
| 37 | செங்கல்பட்டு | நந்திவரம், கூடுவாஞ்சேரி | 2 | 350 |
| 38 | | மறைமலைநகர் | 6 | 1139 |
| | மொத்தம் | | 433 | 56098 |
| சென்னை | | | | |
| | மண்டலம்–1 | அகில இந்திய வானொலி நகர், எர்ணாவூர் | 1 | 62 |
| | | மொத்தம் | 434 | 56,160 |

சுன்சோங்கம் ஜடக் சிரு
முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

13/1/2023
பிரிவு அலுவலர்

13/1/2023